Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

**SESSIONS CASE NO.23/2021**

Deposition of PW10 Witness for Defence

Defence Court

Name :M.Sakthivel Caste:

Father's Name :Mohan Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 03rd day of August 2023.

**(A1 and A2 are absent and Petitions filed U/s.317 Cr.P.C is allowed. A3 to A5 are present )**

**முதல் விசாரணை-**

நான் தற்போதும் சம்பவ காலத்திலும் சென்னை பெருநகர காவல் தனி பெருவிரல் ரேகை பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். 12/09/2020 அன்று காலை 08.30 மணியளவில் டி5, திருவேற்காடு காவல் நிலை ஆய்வாளரின் போன் மூலமான வேண்டுகோளின் பேரில் திருவேற்காடு, கோலடி கிரமம், அபிராமி நகர் முட்புதரில் அஜித்குமார் என்பவர் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் சம்பவ இடத்தில் விரல் ரேகை பதிவுகள் ஏதும் உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் கூறினார். எங்கள் பிரிவிக்கு பொறுப்பு அதிகாரியாக துணை கண்காணிப்பாளர் திரு. பஞ்சாட்சரம் இருந்தார். அவரது உத்தரவின் பேரில், நான் அன்றைய தினம் மதியம் 02.45 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கிருந்த பீர் பாட்டில், பிராந்தி பாட்டில், வாட்டர் பாட்டில் மற்றும் டம்பளர் ஆகியவற்றை ஆய்வு செய்து பார்த்ததில் விரல் ரேகை ஏதும் காணப்படவில்லை. அந்த பொருட்கள் பொது வெளியில் இருப்பதால் அதன் உள்ளிருக்கும் திரவம் வெளிபுறத்தில் வழிந்து இருப்பதினால் பதிவாகி இேருக்கும்

விரல் ரேகைகள் காணப்படாமல் இருக்க வாய்ப்புள்ளது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். **குறுக்கு விசாரணை**

எழுத்து பூர்வமாக வேண்டுகோள் வரவில்லை. எனக்கு தகவல் வந்த 6 மணி நேரம் கழித்து நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது சம்பவ இடத்தை மட்டும் குறிப்பிடும் அளவில் பாதுகாப்பு வேலி போடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. நான் போலீஸ் விசாரணையின் போது காலி பாட்டில்கள், காலி டம்பளர்களை ஆய்வு செய்ததாக கூறினேன் என்றால் சரிதான். பொதுவாக ஒரு பொருளில் எவ்வளவு நேரம் விரல் ரேகை இருக்கம் என்றால் அந்த பொருள் இருக்கும் சுற்று சூழலை பொறுத்தது. நான் எழுத்துபூர்வமாக அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை. நான் சம்பவ இடத்திற்கே செல்லவிவல்லை என்றறும் துறை ரீதியாக கேட்டதன் பேரில் நான் தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.